# மனுதர்ம சாத்திரத்திலும் திருக்குறளிலும் விருந்தோம்பலறம்: ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு

# Hospitality in Manu Dharma Sastra and Tirukkural: A Philosophical Analysis

முனைவர். இரத்தினசபாபதி பிரேம்குமார் / Dr. Ratnasabapathy Premkumar[1]

Date of submission: 2023-04-01
Date of acceptance: 2023-06-02
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name:
Dr. Ratnasabapathy Premkumar
Email: premkumarr@esn.ac.lk

**Abstract**

Manu dharma Sastra is an ancient ethical and legal text for Hindus composed by Manu during the period of the 3rd century B.C. and Tirukkural, conceived the Veda for all, and was composed by Tiruvalluvar which dates back to 3rd century A.D to 5th Century A.D. Both texts comprise moral teachings for humanity and speak about the virtue of hospitality. Even though some Tamil Scholars inferred the influence of Manudharma Sastra on Tirukkural, Tirukkural reveals some unique characteristics which substantially differ it from Manu Dharma Sastra, Both texts attribute many metaphysical ideas to hospitality. On the one hand, Manu dharma Sastra connects hospitality to ethical rules, rituals, and violation of the rules and their consequences based on Hindu Varna Ashrama Dharma. On the other hand, Tirukkural narrates hospitality based on philosophical systems and thoughts that prevailed in the period of righteousness (Post-Sangam period) in Tamil Nadu. For Valluvar, hospitality is more conceived as an essential duty for a householder than Manu and the hospitality of Manu is more associated with religious and ritual systems than that of Valluvar. The hospitality of Valluvar could be attributed to humanitarian and materialistic aspects compared to the Hospitality of Manu. Thus, this study unearths similarities and differences between the texts on hospitality and tries to reveal unique features of the hospitality of Tirukkural.

**Keywords:** Saiva Siddhanta, Liberation of soul, Temples, Culture, Spiritual tourism

## அறிமுகம்

மனுதர்ம சாத்திரம் இந்துக்களின் ஒழுக்கவியல் கருத்துக்களை எடுத்துக் கூறும் சட்ட நூலாகவும் ஒழுக்கவியல் நூலாகவும் விளங்கி வருகின்றது. மனு என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல் பன்னிரெண்டு அதிகாரங்களை கொண்டது. இந்து தர்மத்தின் வருணாச்சிரம அடிப்படையில் (பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் (ஆச்சிரம நிலை: பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானபிரஸ்தம், சந்நியாசம்) ஆகிய நிலைகளின் அடிப்படையில் ஒழுக்க அறங்களையும், குற்றங்களையும் தண்டனைகளையும் எடுத்துரைக்கின்றது. கல்வி, அரசியல், பொருளாதாரம், ஆன்மீகம் போன்ற பல்வேறு விடயங்களை தன்னகத்தே

[1]The author is a Senior Lecturer in the Department of Philosophy and Value Studies, Eastern University, Sri Lanka, Vantharumoolai. premkumarr@esn.ac.lk

கொண்டுள்ள இந்நூல் இந்திய தத்துவ விழுமியங்களான அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு என்ற நாற்பொருள் பற்றியும் பேசுகிறது. இந்நூலின் மூன்றாம் அதிகாரமான இல்லறவியலில் விருந்தோம்பல் தொடர்பான கருத்துக்களை காண முடிகின்றது. உலகப் பொதுமறை என அறிஞர்களால் போற்றப்படும் திருக்குறளில் மனுவின் செல்வாக்கு எடுத்துரைக்கப்படுன்றது. இந்திய சிந்தனை மரபில் துறவறத்தைக் காட்டிலும் இல்லறம் இரண்டாம் நிலையில் வைத்து நோக்கப்பட்டாலும் மனுதர்ம சாத்திரத்திலும் திருக்குறளிலும் இல்லறம் எனும் பகுதியில் விருந்தோம்பலறம் முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது. மேலும் சங்ககால தமிழர்களுக்கு என தனித்துவமான ஒழுக்க அறங்கள் இருக்கின்றன என்ற கருத்தும் அறிஞர்கள் மத்தியில் நிலவுகின்றது. இத்தகைய பிற்புலத்தில் இல்லறத்திற்குரிய முக்கிய அறங்களில் ஒன்றாக திருக்குறளில் கூறப்படும் விருந்தோம்பலறம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விருந்தோம்பல் தமிழர்களுக்கே உரிய தனித்துவமான அறமா என்ற வினா முன்வைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## முந்தைய ஆய்வுகள்

முப்பால் என்று அழைக்கப்படும் திருக்குறளில் விருந்தோம்பலறம் அறத்துப்பாலில் இல்லறவியல் பகுதியில் ஒன்பதாம் அதிகாரமாக வைக்கப்பட்டுள்ளது. திருக்குறளுக்கு காலத்தில் முந்தியதாக விளங்கும் மனுதர்ம சாத்திரம் திருக்குறள்மீது செல்வாக்குச் செலுத்தியிருப்பதாக பல அறிஞர்கள் கருதுகின்றனர். குறிப்பாக இல்லறவியலில் பல கருத்துக்களை வள்ளுவர் மனுதர்ம சாத்திரத்தில் இருந்து எடுத்தாண்டிருக்கின்றார் என்ற கருத்தினையும் சில அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர் (Vaiyapuripillai, 1995). சங்க கால தமிழர்களிடம் விருந்தோம்பலறம் அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குவதை சங்க நூல்கள் எடுத்தியம்புகின்றன (Puram. 333). திருக்குறள் எழுந்த காலம் அறநூற் காலம் எனவும் அக்காலத்தில் பல்வேறு சமய தத்துவங்கள் (வேதநெறி, சமணம், பௌத்தம், ஆசிவகம்) தமிழ் நாட்டில் வழக்கில் இருந்தன எனவும் தமிழ் நாட்டு வரலாறும் இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன (Velupillai, 2004). வள்ளுவர் சமணராக இருக்கலாம் என்ற கருத்தும் தமிழரறிஞர்கள் மத்தியில் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது (Vaiyapuripillai, 1988). இந்து வேதமரபிலிருந்து (தர்ம சாத்திரங்கள், அர்த்த சாத்திரம், நாட்டிய சாத்திரம் மற்றும் உபநிடதங்கள்) தனது கருத்துக்களை வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார் என்ற வாதமும் திருக்குறள் தொடர்பான ஆய்வில் முன்வைக்கப்படுகின்றது (Nagaswamy, 2018). இத்தகைய பிற்புலத்தில் இவ்வாய்வு தமிழர்களின் விருந்தோம்பலறத்தின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க முயல்கின்றது.

## ஆய்வு மூலங்களும் முறையியலும்

இவ்வாய்வில் திருக்குறள் பற்றிய மூல நூலும் உரை நூல்களும் மனு தர்ம சாத்திரத்தின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிப்பெயர்ப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தத்துவவியலின் ஆய்வு முறைகளான விவரிப்பு முறை, எண்ணக்கரு தெளிவுபடுத்துகை, பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டுமுறை, விமர்சன மற்றும் முழுமை முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## வாதங்களும் பகுப்பாய்வும்

மனுதர்ம சாத்திரத்திலும் திருக்குறளிலும் விருந்தோம்பலறம் தொடர்பாக காணப்படும் ஒருமித்த கருத்துகள்.

## விருந்தோம்பலறமும் புலன் கடந்த இயற்பியல் அடிப்படையும்

மனுதர்ம சாத்திரமும் திருக்குறளும் விருந்தோம்பலறத்தின் அடிப்படையாக புலன் கடந்த இயற்பியல் அடிப்படையினை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். புலன் கடந்த இயற்பியல் (Metaphysics) தத்துவவியலில் முக்கியத்துவப்படுத்தப்படும் பிரதான பிரிவாகவும் நோக்காகவும் காணப்படுகின்றது. ஐம்புலக் காட்சிக்கு அப்பாற்பட்ட

விடயங்களை இருப்புடையதாகவும் உண்மையெனவும் புலன் கடந்த இயற்பியல் ஏற்றுக்கொள்கின்றது. கடவுள், சொர்க்கம், நரகம், ஊழ்வினை, மறுபிறப்பு, ஆன்மாவின் நித்திய தன்மை போன்ற கருத்துகளை தத்துவவியலில் புலன் கடந்த இயற்பியல் சார்ந்த கருத்துகள் என அழைப்பர். மேற்குறிப்பிட்ட புலன் கடந்த இயற்பியல் அடிப்படையினைக் கொண்டதாக மனுதர்ம சாத்திரம் மற்றும் திருக்குறள் குறிப்பிடும் விருந்தோம்பலறம் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக பின்வரும் மனுதர்ம சாத்திர தொடர்கள் விருந்தோம்பலுக்கும் மறுபிறவிக்கும் இடையிலுள்ள உறவினை எடுத்துக் காட்டுகிறது.

*“சகல வசதிகளுமுடைய இல்வாழ்வான் ஒருவன் பிறன் வீட்டுச் சோற்றை விரும்பி விருந்தாளியாகப் பாவனைச் செய்து சென்று உபசாரம் பெறுகிறானோ, அவன் மறுபிறவியில் மாடாய் பிறந்து தன்னை உபசரித்தவனுக்கு உழைப்பான்”*

*(ம. த. சா. III .104)*

இதே போல் திருக்குறளும் விருந்தோம்பலறத்திற்கும் புலன் கடந்த இயற்பியல் கருத்தான சொர்க்கத்திற்கும் உள்ள கட்டாயத் தொடர்பினை ஏற்றுக்கொள்கிறது. வீட்டிற்கு வந்த விருந்தினரை நன்கு உபசித்து வரவிருக்கும் விருந்தினருக்காகக் காத்திருக்கும் இல்லறத்தான் சொர்க்கத்தில் வானவர்களால் நல்ல விருந்தினராக மதிக்கப்படுவான் என்ற கருத்தினை வெளிப்படுத்தும் குறட்பா ஒன்றைக் காண முடிகிறது.

*“செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*

*நல்விருந்து வானத் தவர்க்கு.”*

*(குறள் 86)*

### விருந்தோம்பலும் இல்லறத்தின் நோக்கமும்

இல்லறத்தை ஒரு இல்லறத்தான் மேற்கொள்வது விருந்தோம்பலுக்காகத்தான் என்ற கருத்தினை வெளிப்படுத்தும் பல தொடர்களை மனுதர்ம சாத்திரத்தில் காண முடிகிறது. ஓர் இல்லறத்தான் தினமும் செய்ய வேண்டிய ஐம்பெரும் வேள்விகளுள் ஒன்றாக விருந்தோம்பல் மனுதர்ம சாத்திரத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது. இதனை ‘மானுட யக்ஞம்’ என மனு குறிப்பிடுகின்றார் (ம. த. சா III. 70). வள்ளுவர் விருந்தோம்பலை ஒரு வேள்விக்குச் சமனானதாகவும் ஒரு வேள்வியின் பயனைத் தரவல்லது என்று கருதுவது குறிப்பிடத்தக்கது ‘விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்’ (குறள்.87) இல்வாழ்க்கையினை பிராண வாயுவுக்கு ஒப்பிடும் மனு பிரமச்சாரிகள், வான பிரஸ்தர்கள், சந்நியாசிகள் என்ற மூவரும் இல்லறத்தை சார்ந்திருப்பதை ‘பிராணவாயு’ என்ற உவகை மூலம் விளக்குகிறார் (ம. த. சா. மிமிமி. 77). ஏனைய மூன்று ஆச்சிரமத்தாரும் உணவிற்காக விருந்தினராக வரவேண்டிய வாய்ப்புள்ளது என்பதை மனு சுட்டிக்காட்டி இந்து தர்மத்துக்கு அடிப்படையாக இல்வாழ்க்கையும் விருந்தும் உள்ளது என்ற கருத்தினை எடுத்துரைக்கின்றார். ஆதாரமாக,

*“மற்ற மூன்று ஆசிரமங்களையும் பொருந்தியிருப்போர் வேதம் ஓதுவதற்கும், பிச்சை ஏற்பதற்கும் ஆதாரமாக விளங்குவதனால் இல்வாழ்க்கை ஏற்புடைத்தாகும்”*

*(ம. த. சா. III. 78)*

இவ்வகையில் இல்லற வாழ்க்கை இந்து தர்மத்தின் முதுகெலும்பாக இருப்பதை உணரமுடிகின்றது. ஏறத்தாழ ‘இதே கருத்தினை வள்ளுவரும் இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்’ (குறள் 41) என்ற குறட்பா மூலம் வெளிப்படுத்துகின்றார். திருக்குறளின் விருந்தோம்பல் அதிகாரத்தின் முதலாவது குறள் இல்வாழ்க்கையின் பிரதான நோக்கம் விருந்தோம்பலே என உறுதியாக கூறுகிறது.

“இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு” *(குறள் 81)*

இங்கு ‘வேளாண்மை’ என்பது உபகாரம் *(உதவி)* (Vaiyapuripillai, 1982 p.3844) எனும் நேரடிப் பொருளிலும் காலப்போக்கில் வேளாண்மை என்பது பயிர்ச்செய்கை தொழிலை குறிப்பதாயினும் பயிர்ச் செய்கை

தொழிலின் நோக்கம் ஏனையோருக்கு உணவு வழங்குதல் என்பதன் அடிப்படையில் இல்லறத்தார்கள் வேளாண்மை செய்பவர்களாக கருதப்பட்டு வந்தமையினை இக்குறள் வெளிப்படுத்துகின்றது. இவ்வகையில் இல்லறத்துக்குரிய முதன்மை அறமாக விருந்தோம்பல் இருக்கின்றது என்ற கருத்தில் மனுவும் வள்ளுவரும் ஒன்றிணைந்து செல்வதை காணலாம்.

## விருந்தோம்பலறமும் ஒரு உயர்ந்த இல்லறத்தானும்

விருந்தோம்பலறத்தை புரியும் ஒரு இல்லறத்தான் எத்தகைய பண்புகளை கொண்டிருக்க வேண்டும்? எத்தகைய பண்புகளை கொண்டிருக்க கூடாது? போன்ற விடயங்களை மனுதர்ம சாத்திரமும் திருக்குறளும் எடுத்துரைக்கின்றன. விருந்தோம்பலறம் ஒரு இல்லறத்தானுக்கு கட்டாயமானது என்பதில் வள்ளுவரும் மனுவும் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்துகின்றனர். மனு குறிப்படும் இல்லறத்தான் அதிக ஒழுக்க விதிகளை (சடங்கு சம்பிரதாயங்கள்) பின்பற்றுவதோடு விருந்தோம்பல் விதிகளை மீறுகின்ற போது அவனுக்கு பாவங்களும் துன்பங்களும் ஏற்படுவதை மனு எடுத்துக் கூறுகின்றார். விருந்தோம்பலை மேற்கொள்ளும் இல்லறத்தான் தொடர்பாக மனு மிக விரிவாக பல விதிகளையும் விதி மீறுகைகளையும் குறிப்பிடுகின்றார். ஆனால், வள்ளுவர் ஒரு உயர்ந்த இல்லறத்தான் பற்றி குறிப்பிடும் கருத்துகளும் விடயங்களும் மிக சுருக்கமாக இருப்பதுடன் மிக அடிப்படையானதாகவும் முக்கியமானதாகவும் இருக்கின்றது. மனுதர்மத்தின் படி விருந்தினரை உபசரிக்காமல் திருப்பியனுப்பும் இல்லறத்தான் புண்ணியத்தை இழந்து பாவியாகின்றான். இவற்றை பின்வரும் மனுதர்ம சாத்திர தொடர்கள் வெளிப்படுத்துகின்றன.

*"கழனிகளிற் சிந்தியிருக்கும் நெல்மணிகளைப் பொறுக்கி எடுத்து அதைக் கொண்டு பிழைப்பதாயினும், கடும்தவமே புரிவதாயினும், விருந்தோம்பாதிருப்பின், தேடி வந்தும் உணவு கிடைக்காமல் திரும்புவோனுக்கு, இவன் தேடிய புண்ணியமெல்லாம் போய்ச் சேர்ந்து விடும். விருந்தினர்க்கு உணவளிக்காமல் தான் முன்னர் உண்பவன் இறந்த பின் தனதுடலை நாய் கழுகுகள் தின்னுமென்பதை உணர்வதில்லை. தனக்கு மட்டுமே உணவு சமைத்துக் கொள்கின்றவன் பாவத்தையே உண்பவன். தேவர் முதலானவர்க்கு படைத்துண்பவன் யக்ஞ மிச்சிலை உண்ட பேறு பெறுகின்றான்."*

*(ம. த. சா. III. 100,115,118)*

இத்தகைய ஒரு நிலையினை மறைமுகமாக ஏற்றுக்கொள்ளும் வள்ளுவர் விருந்தினரை எவ்வாறாயினும் உபசரிக்க வேண்டும் என மனுவைப் போல உறுதியாக உள்ளார். ஆனால், இவ்வாறு விருந்தினரை உபசரிக்காமல் விட்டால் ஏற்படும் தீமைகளையும் துன்பங்களையும் மனுதர்ம சாத்திரம் கூறும் அளவிற்கு வள்ளுவர் எடுத்துரைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பின்வரும் குறட்பாக்கள் இக்கருத்தினை வெளிப்படுத்துகின்றன.

*"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*

*மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று"*

*"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா*

*மடமை மடவார்கண் உண்டு"*
*(குறள்.82, 89)*

இல்லறத்தின் பிரதான நோக்கம் விருந்தோம்பலறம் என்பதை வள்ளுவனும் மனுவும் ஏற்றுள்ளனர். விருந்தினர் வீட்டின் புறத்தில் இருக்க தான் மட்டும் உண்ணும் இல்லறத்தான் பாவியாகின்றான் என்பதுடன் இம்மையிலும் மறுமையிலும் பல துன்பங்களை அனுபவிப்பான் என மனு பல இடங்களில் குறிப்பிடுகின்றார் (மேலே காண்க). இவ்வாறு மனு கூறுவதன் மூலம் விருந்தினரின் முக்கியத்துவத்தினை மனு எடுத்துக் காட்டுகிறார். வள்ளுவர் ஏறத்தாழ இதேபோன்ற கருத்தினை உவமை மூலம் விளக்குகின்றார். வீட்டிற்கு வெளியே வந்திருக்கும் விருந்தினர்கள் பசியுடன் இருக்கத்தக்கதாக ஒருவனுக்கு மரணத்தை தடுக்கும் அமிர்தமே கிடைப்பதாயினும் அதனை இல்லறத்தான் உண்ணாமல்

விருந்தினர்களின் பசியை போக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார் (குறள் 82). வீட்டிற்கு வரும் விருந்தினர்களின் பசியை போக்குவதில் மனுவும் வள்ளுவரும் ஒருங்கிணைந்து செல்கின்றனர். மேலும், மனுவின் கருத்துப்படி விருந்தோம்பலறத்தினை மேற்கொள்ளும் இல்லறத்தான் இம்மையிலும் மறுமையிலும் பல நன்மைகளை பெறுவான்.

**எடுத்துக்காட்டாக:**

*"விருந்து வந்த உயிர்க்குச் சோறிட இயலாது போயிடினும், படுக்கை, இருக்கை, தண்ணீர், இன்மொழியேனும் அறத்தாறொழுகும் இல்வாழ்வானிடம் பஞ்சமாயிராது."*

*"...விருந்தோம்புதலால் பொருளும், புகழும், ஆயுளும்*

*நற்கதியும் கிடைக்கின்றன."*

*(ம. த. சா. III. . 101,106)*

ஏறத்தாழ இதே கருத்தினை வள்ளுவரும் விருந்தோம்பல் அதிகாரத்தில் ஒரு குறள் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

*"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை*

*பருவந்து பாழ்படுதல் இன்று."*

*(குறள். 83)*

விருந்தினர் உண்டதன் பின்னர் இல்லத்தலைவனும் அவர் மனைவியும் உண்ண வேண்டும் என மனு வலியுறுத்துகின்றார் (ம. த. சா. III. . 116). ஏறத்தாழ இதே கருத்தினை "ஞ்..விருந்தோம்பி மிச்சின் மிசைவான் புலம்" (குறள்85) என்ற தொடரின் மூலம் வள்ளுவர் வெளிப்படுத்துகின்றார்.

மனுவும் வள்ளுவரும் வினைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். விருந்தோம்பலில் ஈடுபடும் இல்லறத்தானுக்கு புகழும், ஆயுளும், நற்கதியும் கிடைக்கும் என மனு குறிப்பிடுகின்றார் (ம. த. சா. III. 106). இதே போல் வள்ளுவரும் விருந்தோம்பலில் ஈடுபடும் இல்லறத்தான் சொர்க்கத்திற்கு செல்வான் என்ற கருத்துபட "...நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள். 86) என்ற தொடர் மூலம் மனுவுடன் உடன்படுகின்றார். இவ்வகையில் மனுவும் வள்ளுவரும் புலன்கடந்த இயற்பியல் சார்ந்த நிலைகளை விருந்தோம்பலுடன் இணைத்து நோக்குகின்றனர்.

மனுதர்ம சாத்திரத்திலும் திருக்குறளிலும் விருந்தோம்பலறம் தொடர்பான வேறுபட்ட கருத்துக்கள்

**விருந்தோம்பலும் ஐம்பெரும் கடமைகளும்**

காலத்தால் மனுதர்ம சாத்திரம் திருக்குறளுக்கு முந்தியதாக காணப்படுவதன் காரணமாகவும் இல்லறம் தொடர்பாக பல கருத்துகளை மனுதர்ம சாத்திரம் கொண்டிருப்பதைப்போல திருக்குறளும் கொண்டிருப்பதன் காரணமாக சில அறிஞர்கள் திருக்குறளில் மனுதர்ம சாத்திரத்தின் செல்வாக்கினை சுட்டிக்காட்டியுள்ளனர் (Vaiyapuripillai,1995, ஜீ.5556). விருந்தோம்பலறம் தொடர்பாக மனுதர்ம சாத்திரம் மற்றும் திருக்குறள் கூறும் கருத்துக்களில் ஒருமித்த கருத்துக்கள் காணப்படுவது போல் விருந்தோம்பலறம் தொடர்பாக இவ்விரண்டு நூல்களிலும் வேறுபட்ட கருத்துக்களும் காணப்படுகின்றன.

மனுதர்மம் விருந்தோம்பலை ஒரு இந்து சமய சடங்காக, கிரியையாக நோக்குகின்றது. ஒரு இந்து இல்லறத்தான் மேற்கொள்ளும் ஐம்பெரும் வேள்விகளுள் ஒன்றாகவும் இறுதியான ஒன்றாகவும் (ஐந்தாவது) மனுதர்மம் விருந்தோம்பலை நோக்குவது குறிப்பிடத்தக்கது. மனுவின் ஒழுக்கவியலில் ஒரு இல்லறத்தானின் கடமையில் ஐந்தில் ஒரு பங்கினையே விருந்தோம்பல் பெற்றுக் கொள்கின்றது. சான்றாக,

*"வேதம் ஓதுதலால் முனிவரையும், அவி சொரிவதனால்*

*தேவரையும், சிரார்த்தத்தால் தென்புலத்தாரையும்,*

*உணவினால் விருந்தினரையும், பலியிடுவதால்*

*பூதங்களையும் திருப்தி செய்விக்கவும்"*

*(ம. த. சா. III . 81)*

மேலும் மனிதர்களுக்கான விருந்தோம்பலை இறுதியான இல்லறத்தின் கடமையாக மனு கூறுகின்றார். ஆதாரமாக,

*"1.வேதமோதுதல் பிரம்மயக்ஞும், 2.அன்னம் படைத்தோ புனல் வார்த்தோ தென்புலத்ததார்க்கு வழிபாடியற்றல் பிதுர்யக்ஞும், 3. தீயில் அவிசொரிந்து தேவரை வழிபடல் தேவயக்ஞும், 4. பலியிடல் பூதயக்ஞும், 5. விருந்தோம்பல் மானுடயக்ஞும்."*

*(ம. த. சா. III . 70)*

விருந்தோம்பலை மனு இந்துமத சடங்காக நோக்கிய அளவிற்கு வள்ளுவர் அதனை நோக்கவில்லை எனக் குறிப்பிடலாம். வள்ளுவரின் வாதம் என்னவெனில் இல்வாழ்க்கை என்பதே விருந்தோம்பலுக்காத்தான் ஆனால் மனுவின் நோக்கின் படி இல்வாழ்வானின் கடமைகளில் ஐந்தில் ஒரு பங்கினையும் இறுதி இடத்தையும் விருந்தோம்பல் பெற்றுக் கொள்கின்றது. இவ்வகையில் விருந்தோம்பல் மனு மற்றும் வள்ளுவரின் சிந்தனைகளில் சமனான இடத்தைப் பெற்றுள்ளது என்று கூறமுடியாதுள்ளது. இல்வாழ்க்கையினை மேற்கொள்வது விருந்தோம்பலுக்காகத்தான் (குறள்.81) என்று வள்ளுவர் இல்வாழ்க்கையினை விருந்தோம்பலுக்குச் சமமாக்குகிறார். ஆனால் மனு விருந்தோம்பலினை இல்வாழ்க்கையின் ஒரு பகுதியாக காண்கிறார்.

இல்லறத்திற்குரிய ஐந்து கடமைகளில் இருவருக்குமிடையே மேலும் சில வேறுபாடுகளை காணமுடிகிறது. மனுவின் படி ஐந்து கடமைகள் பின்வருமாறு அமைகிறது.

1. பிரம்ம யக்ஞும் (வேத மோதுதல்)
2. பிதுர் யக்ஞும் (தென்புலத்தார் வழிபாடு)
3. வேத யக்ஞும் (அவிசொரிந்து தேவர்களை வழிபடல்)
4. பூத யக்ஞும் (வீட்டுக்கு வெளியில் சில மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உணவை படைத்தல்.
5. மானுட யக்ஞும் விருந்தோம்பல்

*(ம.த.சா. III .92)*

மனுவின் ஒழுங்கில் ஐந்தாம் இடத்தினை (இறுதி இடத்தினை) விருந்தோம்பல் பெறும் அதேவேளை வள்ளுவர் கூறும் இல்லறத்துக்குரிய ஐம்பெரும் கடமைகள் பின்வரும் ஒழுங்கில் அமைகின்றது. இது பற்றி வள்ளுவர் இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார்.

1. தென்புலத்தார் வழிபாடு
2. தேவர்கள் வழிபாடு
3. விருந்தினரை உபசரித்தல்
4. சுற்றத்தாரைப் பேணுதல்
5. இல்லறத்தான் தன்னை கவனித்துக் கொள்ளுதல்.

இவ்வொழுங்கு

*"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்*

*கைம்புலத்தாறோம்பல் தலை"* *(குறள்.43)*

எனும் குறளில் எடுத்துரைக்கப்படுகின்றது.

வள்ளுவர் கூறும் ஐம்பெரும் கடமைகளில் விருந்தோம்பல் மூன்றாம் இடத்தினை பெறுதல் குறிப்பிடத்தக்கது. அதேவேளை மனு குறிப்பிடும், வேதம் ஓதுதல், பூத வேள்வி போன்ற விடயங்களை வள்ளுவர் இல்லறத்தானுக்கு விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மனு இல்லறத்தானின் முதற் கடமையாக வேதம் ஓதலையும் இறந்த முன்னோர்களை வழிபடுதல் அதாவது தென்புலத்தாரை வழிபடுதலை வள்ளுவர் ஐம்பெரும் கடமை ஒழுங்கில் முதலில் வைத்து போற்றுவது குறிப்பிடத்தக்கது. பூத வேள்வி தொடர்பாக இல்வாழ்க்கை அதிகாரத்திலும் விருந்தோம்பல் அதிகாரத்திலும் வள்ளுவர் குறிப்பிடாதது இருவருக்கும் இடையேயான வேறுபாட்டினை எடுத்துக் காட்டும் மற்றுமோர் முக்கிய அம்சமாகும்.பூத வேள்வியில் நாய், பாவி, சண்டாளன், தீராப் பிணியாள ன், காக்கை, கிருமி போன்ற மனிதன் மற்றும் மனிதன் அல்லாத உயிரினங்கள் உள்ளடக்கப்படுகின்றன (ம. த. சா. III. 92).

இவ்வாறு மனிதர்களில் குறைபாடு உடைய பாவிகள், மனிதரல்லாத

*உயிரினங்கள் போன்றவற்றின் நலன்கள் மனிதர்களைக் காட்டிலும் அதிகமாக மனு கருத்திற் கொள்வது போல் வள்ளுவர் கருத்திற் கொள்கிறார் என்று கூறமுடியாது. பூதவேள்வியினை முடித்த பின்னரே விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்ற கருத்தினையும் மனு வெளிப்படுத்துகின்றார் (ம. த. சா.மிமிமி. 94). ஆனால், இத்தகைய வெளிப்பாட்டினை திருக்குறளில் விருந்தோம்பல் அல்லது இல்வாழ்க்கை பகுதியில் காண முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

## விருந்தினரின் தகுதியும் மனுதர்மமும்

*ஒரு நல்ல இல்லறத்தானின் இலக்கணங் களை கூறுவதுடன் நின்றுவிடாமல் ஒரு நல்ல விருந்தினன் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கக் கூடாது? போன்ற கருத்துக்களையும் மனு குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக*

*“அன்றாடம் வராமல் ஒரேவழி நாடி வருவோனே விருந்து. ஓரிரவு வரை அவன் விருந்தினனாக மதிக்கத் தக்கவன்.”*

*(ம. த. சா. III . 102)*

*“தன்னைக் காணவரும் உள்ளூர்க்காரனும் தன் மனைவி வேள்வித் தீ இவற்றைத் தேடிக் காரியமாக வருகின்ற அந்தணனும் அதிதிகளென்று கொள்ளத் தக்கவரல்லர்.”*

*(ம. த. சா. III. 103)*

*மனு குறிப்பிடுவதைப்போல் ஒரு நல்ல விருந்தினருக்குரிய இலக்கணங்களை வள்ளுவர் சுட்டிக்காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பசியுடன் வரும் அனைவரையும் வள்ளுவர் விருந்தினராககவே கருதியிருக்கக் கூடும். மேலும் விருந்தினரை மிகவும் கனிவுடன் நோக்கி அனுசரிக்க வேண்டும் என்ற கருத்தை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மேலும் விருந்தினர்களை இல்லறத்தான் ஒரு சுமையாக கருதாமல் முகமலர்ச்சியுடன் முதலில் நோக்க வேண்டும் பின்னர் உபசரிக்க வேண்டும் என்ற யதார்த்தமான பகுத்தறிவு சார்ந்த மனிதாபிமான கருத்தினை வள்ளுவர் பதிவு செய்கின்றார். மேலும் மனுவின் விருந்தோம்பலில் அதிகளவு சமய சடங்குகளின் செல்வாக்கினை காண முடிகிறது. இத்தகைய பிற்புலத்தில் வள்ளுவரின் விருந்தோம்பலில் மனுவின் செல்வாக்கு ஓரளவு காணப்படுகின்றது என்று கூறுவதில் தவறு இருக்க முடியாது.*

## நிறைவுரை

*இல்வாழ்க்கையில் விருந்தோம்பல் முக்கியமான கடமை என்பதனை இருவரும் ஏற்றுக்கொள்வதுடன் விருந்தோம்பலறத்தின் புலன்கடந்த இயற்பியல் விளைவுகளை இருவரும் ஏற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது. மேலும் இல்லறத்தானை சார்ந்து ஏனைய ஆச்சிரமத்தார் இருப்பதை மனுவும் வள்ளுவரும் ஏற்றுக்கொள்கின்றனர். விருந்தினருக்கு பின்னரே இல்லறத்தானும் அவனது மனைவியும் உண்ண வேண்டும் என்பதனை இருவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வாறாக விருந்தோம்பல் அறம் தொடர்பாக பல ஒற்றுமையான அம்சங்கள் இருவருக்கிடையே காணப்பட்டாலும் இருவருக்குமிடையே வேறுபாடுகளும் காணப்படுகின்றன. மனுவினைக்காட்டிலும் வள்ளுவர் விருந்தோம்பலுக்கு அதிக முக்கியத்துவத்தினை வழங்குவது குறிப்பிடத்தக்கது. மனுவின்படி இல்லறத்தார்களின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றாக இருக்கும் விருந்தோம்பல் வள்ளுவரின் படி இல்வாழ்க்கையின் பிரதான நோக்கமாக மாறுவது இருவருக்கும் இடையே காணப்படும் முக்கிய வேறுபாடாகும். மேலும் மனுவின் விருந்தோம்பல் இந்து சமய சடங்குகளுடன் அதிகம் பின்னிப்பிணைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மனுவுடன் ஒப்பிடும் போது வள்ளுவரின் விருந்தோம்பல் குறைந்தளவு சமயஞ் சார்ந்த விதிகளுடன் தொடர்புபடுவதைக் காணமுடிகின்றது. விருந்தோம்பலை மேற்கொண்டால் எத்தகைய நல்ல விளைவுகள் ஏற்படும்? விருந்தோம்பலை மேற்கொள்ளாவிட்டால் எத்தகைய தீய விளைவுகள் ஏற்படும்? என்பவை தொடர்பாக மனு கூறும் அளவிற்கு விரிவாக வள்ளுவர் கூறவில்லை. விருந்தோம்பல் தொடர்பாக மனுவிடம் காணப்படும் அழுத்தம் (கட்டளையாக, சட்டமாக கூறுதல்) வள்ளுவரிடம்*

காணப்படவில்லை. மனு இந்து சமூகத்திற்குரிய தர்மமாக ஒரு அறமாக விருந்தோம்பலை எடுத்துரைக்கின்றார். ஆனால் வள்ளுவரின் விருந்தோம்பல் அவர் காலத்தில் வழக்கில் இருந்த சமண, பௌத்த மற்றும் ஆசிவக சிந்தனைப்பள்ளிகளையும் இணைத்துக் கொண்டது போல் தோன்றுகின்றது. மேற்குறிப்பிட்ட தத்துவங்கள் சொர்க்கம் மற்றும் வினைக் கொள்கையின் இருப்பு என்பவற்றை ஏற்றுக்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கடவுள் மற்றும் வினைக்கொள்கையின் மீது நம்பிக்கை கொள்ளாத தத்துவமான பொருள்முதல்வாத சிந்தனையாளர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கூறுகளை வள்ளுவரின் விருந்தோம்பல் கொண்டிருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இத்தகைய பண்பு வள்ளுவரது தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு இல்வாழ்வான் விருந்தினர்களை முகமலர்ச்சியோடு வரவேற்க வேண்டும் மற்றும் இல்வாழ்க்கையின் நோக்கம் விருந்தோம்பல் *(குறள். 90, 81)* இவ்வகையில் வள்ளுவரின் விருந்தோம்பல் தொடர்பான கருத்துக்கள் மனுவின் விருந்தோம்பல் கருத்துக்களினால் ஓரளவிற்கு செல்வாக்கிற்குட்பட்டு காணப்பட்ட போதும் வள்ளுவரின் விருந்தோம்பல் பலதனித்துவமான பண்புகளைக் கொண்டு விளங்குவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

## Reference


Anbumani. (2007). *Pathinen Keezhkanakku Noolgal.* Chennai: Manimekalai Prasuram.

Buhler, G. (1993). *Laws of Manu*. Delhi: Motilal Banrsidass Publishers Pvt. Ltd.

Chidambaranar, S. (2003). *Pathinen Keezhkanakkum Thamizhar Vaazhvum.* Chennai: Arivu Pathippakam,

Desikar, D. S. (1950). *Tirukkuṟal-Uraivalam, Aruthupal.* Tamil Nadu: Dharmapura Adheenam Mayiladuthurai.

Parimanam, A. M.& .Balasubramanian, K. V. (2004). *Puṟanāṉūṟu Original Text and its Commentary.* Chennai : New Century Book House.

Seetharam, T. (2000). *Manudharma Sastram.* Chennai: Alaikal Publishers.

Sharma, C. (2003). *A Critical Survey of Indian Philosophy.* Delhi: Motilal Banarisidass Publishers.

Subrahmanian, N. (1996). *The Tamils* (Their *History, Culture, and Civilization).* Madras: Indian Institute of Asian Studies.

Vaiyapuripillai, S. (1982). *Tamil Lexicon* (Vol. I -VI). Madras: University of Madras.

Vaiyapuripillai, S. (1988). *History of Tamil Language and Literature:* Madras: New Century Book House.

Vaiyapuripillai, S. (1995). *Tamil Sudar Manikal.* Madras: India Paari Nilaiyam.

Velupillai, A. (2004). *Tamil Ilakkiyathil Kalamum Karuthum.* Colombo: Kumaran Book House.